RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22485

# சங்க புறப்பாடல்களில் போருக்கான காரணங்கள்

**இல. இலக்கியா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, கச்சியப்ப முனிவர் தமிழியல் கல்லூரி, உமையாள்புரம், செவ்வந்திலிங்கபுரம், முசிறி, திருச்சிராப்பள்ளி - 621202, தமிழ்நாடு, இந்தியா

# Causes of War in Sangam Songs

**L. Ilakkiya** [a, *]

[a] Department of Tamil, Kachiyappa Munivar Thamizhiyal Kalloori, Umayalpuram, Sevanthilingapuram, Musiri, Tiruchirappalli – 621202, Tamil Nadu, India

* Corresponding Author: ilakkiyakanthan@gmail.com

Received: 28-04-2022
Revised: 24-09-2022
Accepted: 07-10-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

It is natural for people to interact with other living beings and nature. It is undesirable for man to fight with his own kind, but this article does not talk about the war of the people with nature, but to find out the reason for the war waged by the people among themselves. Food, clothing and shelter are the basic needs of a human being. If he is unable to do so, the society to which he belongs, or the state to which he belongs, must meet those needs. When a king is unable to satisfy the needs of his country, he seeks the help of friendly countries. In the absence of that, a king wars with other countries and satisfies the needs of his subjects by expropriating them. This can be regarded as warfare in the interest of the common people.

**Keywords:** Sangam age, War, Sangam Songs, Causes of War

## முன்னுரை

மக்களினம், பிற உயிரினங்களோடும் இயற்கையோடும் பாராடுதல் இயற்கையாகும். மனிதன் தன் இனத்தினரோடு போராடுவது விரும்பத்தகாதது எனினும் மக்களினம் இயற்கையோடு நடத்திய போர் பற்றிப் பேசாமல், மக்களினம் தங்களுக்குள் நடத்திய போருக்கான காரணத்தைக் கண்டறிவதாக இக்கட்டுரை அமைகிறது. உணவு, உடை, உறையுள் என்பன மனிதனின் அடிப்படைத் தேவைகள் ஒரு மனிதன் அவனே தன்னுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். அவனால் முடியாதபோது அவன் சார்ந்துள்ள சமூகமோ, அரசோ அத்தேவைகளை நிறைவு செய்ய வேண்டும். ஒரு வேந்தன் தன் நாட்டுத் தேவைகளை நிறைவுசெய்ய இயலாத நிலையில் நட்பு நாடுகளின் உதவியை நாடுகின்றான். அது கிட்டாத நிலையில் ஓர் அரசன் பிற நாடுகளுடன் போரிட்டு அவற்றின் வளம்பறித்துத் தன் நாட்டு மக்களின் தேவைகளை நிறைவு செய்கின்றான். இதனைப் பொதுமக்கள் நலங்கருதிய போர்முறை எனக்கருதலாம்.

## பழந்தமிழரின் போர் வேட்கை

மனிதனின் மனதில் புகழ் இருவழிகளில் உண்டாகிறது. ஒன்று: போரில் வீரத்தை வெளிப்படுத்தி வெற்றி பெறுவதால் உண்டாகின்றது. மற்றொன்று: பிறர்க்கு பொருளை வாரி வழங்குவதனால் உண்டாகின்றது. கொடைக்காக பொருளை ஈட்டுவதற்காகவே வேந்தர்களும் குறுநிலத் தலைவர்களும் போரில் ஈடுபட்டனர் என்ற செய்தியும் பழந்தமிழ் இலக்கியங்களில் காணக்கிடைக்கின்றன.

தொல்காப்பியர்கால அரசியலுக்கு வீரமே அடிப்படையாகும். அக்காலத் தனிமனிதனும் சமூகமும் வீரத்தை முதற்பொருளாகக் கொண்டு தங்கள் வாழ்க்கையை நிலைப்படுத்திக் கொண்டனர். புறவொழுக்கம் என்றாலே போரும், வெற்றியால் உண்டாகும் புகழுமே என்ற பொருண்மை தோன்றுவதாயிற்று.

மக்களுள் ஆடவர், தம் வேந்தனுக்காகப் போரிட்டு மடிவதைப் பெரும்பேறாகக் கருதினர். தம் வேந்தன் அல்லது தலைவன் வெற்றிபெற வேண்டும் என்ற வேட்கையில் தம்மைத் தாமே களப்பலி ஆக்கிக்கொண்ட வீரர்களும் இருந்தனர். அது ஒருவகையில் தற்கொலையாகக் கருதப்பட்டாலும் அதனைக் களவேள்வியாக வீரர்கள் எண்ணினர்.

போரில் ஒருவருக்கு வெற்றியும் மற்றொருவருக்குத் தோல்வியும் ஏற்படுகின்றது. அத்துடன் போர் முடிந்துவிடுவதில்லை. வெற்றி பெற்றவர் தோற்றவரை அடிமையாக்குவதும் அவரிடமிருந்து திறைப்பொருள் கவருவதுமாகிய வன்செயல்களைச் செய்கின்றார். தோற்றவர் மான உணர்ச்சி காரணமாக மீண்டும் பகைவரோடு போரிட்டு வெற்றிபெறுவதற்கு முனைகின்றார். படைகளையும் படைக்கலங்களையும் பெருக்கிப் புதிய நண்பர்களோடு கூட்டணி அமைத்து மீண்டும் போர்செய்து வெற்றிபெறச் சூழ்ச்சி செய்கின்றனர். எனவே, உலகில் போரும் பூசலும் மாறிமாறித் தோன்றுவதும் பின்னர் அமைதி ஏற்படுவதும் பொது நிகழ்வுகள் ஆகிவிட்டன.

பண்டைத்தமிழர் போர்நெறி குறித்து ஆராய்ச்சி செய்த புலவர் கா.கோவிந்தன் மானுடவாழ்வில் போரும் பூசலும் தோன்றியதற்கான காரணங்களை விளக்கியுள்ளார். காலந்தோறும் நில அமைப்புகளுக்குத் தக்கவாறு போர்முறை மாறிவந்துள்ள நிலைகளையும் விளக்கியுள்ளார். பிறருடைய செல்வத்தைப் பறிக்குமுகத்தான் தோன்றியதே முதற்போர் நிகழ்ச்சி என்கின்றார். புகழைப் பரப்பவும் போர்கள் நிகழ்ந்துள்ளன என்று சொல்லி அவற்றை உயர்ந்த காரணத்துக்கு உரியனவாகக் கருதுகின்றார்.

வாழ்வின் பயன்காணாத மக்கள், வளமான செல்வமுடைய மக்களைக் காணுந்தோறும் காழ்ப்புணர்வுற்று அப்பெருவாழ்வு தங்களுக்கும் வர வேண்டும் என்ற ஆசை கொண்டனர். அவ்வாசையை நிறைவேற்றிக்கொள்ள எதற்கும் துணிந்து நின்றனர். செல்வர் தாம்பெற்ற இன்பவாழ்வை வறியவர்க்குப் பகிர்ந்தளிக்கும் விரிந்த உள்ளம் பெறாத நிலையில் அவ்விருசாராருக்கும் இடையே மனவேறுபாடு ஏற்பட்டது. இவ்வாறு தொடக்கத்தில் ஏற்பட்ட மனவேறுபாடு, பின்னர்ப் பகையாகவும், அதன் விளைவாகப் போராகவும் மாறியது: அமைதி கெட்டது. (கா.கோவிந்தன், பண்டைத்தமிழர் போர்நெறி ப.11)

இயற்கையிலேயே வலிமைபெற்ற ஒருவன், வலிமை குறைந்த மற்றவரை ஆட்டிப்படைக்கத் தொடங்கியபோதும் போர் தோன்றியது.

காயும் கனியும் கிழங்குமாகிய இயற்கை உணவுப்பொருள்களும் புலாலுக்கான விலங்கினங்களும் போதிய அளவு கிடைத்து வந்த காலத்தில் போர் எழவில்லை. மக்கள்தொகை பெருகிக்கொண்டு வந்தநிலையில் உணவுப்பொருள் பற்றாத நிலையில் போர் எழுந்தது. (கா.கோவிந்தன், பண்டைத்தமிழர் போர்நெறி ப.13-14)

மனிதன் நாகரிகம் அடைந்த காலத்தில் குறுங்காடுகளை அழித்துப் புன்செய் நிலமாக்கி வேளாண்மை செய்தான். ஆடு, மாடு, எருமை போன்ற விலங்குகளைப் பேணி வளர்த்துச் செல்வத்தைப் பெருக்கினாhன். படிப்படியாகத் தனியுடைமை நிலைபெற்றது. அன்று முதல் வர்க்கப்போராட்டமும் தொடங்கியது. அன்றைய செல்வங்களான ஆநிரைகளைப் பகைவர் கொள்ளையிட்டுச் செல்வதும், அவற்றை மீட்பதும் எனச் சங்கிலித்தொடர் போல போர்நிகழ்ச்சிகள் தோன்றின.

ஆநிரை காரணமாகத் தொடங்கிய வெட்சிப்போர்முறை காலஞ் செல்லச்செல்ல மாற்றமடைந்து நிலத்தைக் கைப்பற்றுதல், கோட்டையைக் கைப்பற்றுதல் என்ற நிலையினை அடைந்தது. வெட்சிப்போர், பொன்னாசை காரணமாக எழுந்த போருக்கு முதற்படியாக அமைந்தது.

வீரநிலைக்காலப் பண்பாட்டின் வளர்ச்சி, வாழ்நாள் சிறியது வளர்புகழ் நெடியது என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்தது என்றும் அக்கொள்கை புறநானூற்றின் வழி அறியப்படுகின்றது என்றும் கதிர் மகாதேவன் குறிப்பிடுகின்றார்.(கதிர் மகாதேவன்,பழந்தமிழர் வீரப்பண்பாடு, ப.3)

சங்ககால வீரர்கள் எந்த நேரத்திலும் போர்வேட்கை உடையவர்களாய் இருந்தனர் என அறிகின்றோம். சங்ககாலத் தமிழரின் தொழில், விளையாட்டு ஆகியனயாவும் மறப்பண்புடன் திகழ்ந்தன. ஊர்ப்பொதுமன்றில் இருக்கும் முழவு, காற்றுமோதி ஒலித்தாலும் அது போர்ப்பறை முழக்கம் என எண்ணி மகிழ்ந்தனராம் வீரர்கள் அச்செய்தியை,

பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை

வளிபொரு தெண்கண் கேட்பின்

அது போர்என்னும் என்னையும் உளனே (புறநானூறு,89:7-9)

என்று ஔவையார் பாடினார்.

ஒவ்வொரு வீரனும் போர்க்களத்தில் தனித்தன்மையுடைய வீரனாய்த் திகழ்ந்தான். இதனை,

போரெனிற் புகலும் புனைகழல் மறவர் (புறநானூறு,31:9)

என்றார் கோவூர்க்கிழார்.

போரிடுதல் புதல்வர் கடமை என்பதை,

ஒளிறுவாள் அருஞ்சமம் உருக்கிக்

களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே (புறநானூறு,312:5-6)

என்று பொன்முடியாரும்,

தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே (புறநானூறு,86:6)

போரில் விழுப்புண்பெறாத நாள்களையெல்லாம், தம் வாழ்நாளில் வீணாகிவிட்ட நாள்களாகக் கருதுவர் வீரார்கள். இவ்வுண்மையை,

விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்

வைக்குந்தன் நாளை எடுத்து (குறள்,776)

எனத் திருவள்ளுவர் குறிப்பிட்டார்.

போருக்குரிய காரணங்களைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது சு.வித்தியானந்தன், இயல்பான மறப்பண்பு, மண்ணாசை, இடஞ்சிறிதென்றும், ஊக்கமேலீடு, அரசுரிமை யார்க்கென்னும் சிக்கல், மானக்குறைவு உண்டாக மாற்றார் நடத்தல், மகள் மறுத்தல் ஆகிய காரணங்களால் போர் தோன்றக்கூடும் என்கிறார்.(தமிழர் சால்பு, ப.88)

மண்ணாசை காரணமாகப் போர்

தமது நாட்டின் எல்லையை விரிவுபடுத்த வேண்டியும் தம் ஆளுகையின் கீழ் எல்லா மக்களும் செயற்பட வேண்டும் என்ற ஆதிக்கவுணர்வு காரணமாகவும் போர் நிகழ்ந்துள்ளது.

தென்திசைக்கண் குமரியையும் வடதிசைக்கண் இமயத்தையும் கீழ்த்திசைக்கண்ணும் மேற்திசைக்கண்ணும் கடலையும் எல்லையாகக் கொண்டு மயலயம் காடும் நாடும் எனக்கிடந்த தமிழகத்தை நடுநிலையோடு ஆட்சிசெய்த முன்னோரது மரபைக் காத்தவனே என்று யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும் பொறையைக் குறுங்கோழியூர்கிழார் பாடினாhர்.

தென்குமரி வடபெருங்கடல்

குண்டே கடலாவெல்லை

குன்றுமலை காடுநாடு

ஒன்றுபட்டு வழிமொழியக்

கொடிதுகடிந்து கோறிருத்திப்

படுவதுண்டு பகலாற்றி

இனிதுருண்ட சுடர்நேமி

முழுதாண்டோர் வழி காவல (புறநானூறு,17:1-8)

களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் வாகைப்பறந்தலை என்னுமிடத்தில் நன்னனோடு போர் செய்து, இழந்த சேரநாட்டுப் பகுதிகளை மீட்டான். போரில் நன்னன் தோல்வியுற்று இறந்து போனான் என்றும் அறியமுடிகின்றது. அவளது காவல்மரமாகிய வாகை மரமும் வெட்டிச் சாய்க்கப்பட்டது என்பதையும்,

எழுமுடி கெழீஇய திருஞெமர் அகலத்துப்

பொன்னாங் கண்ணிப் பொலந்தேர் நன்னன்

சுடர்வீ வாகைக் கடிமுதல் தடிந்த

தார்மிகு மைந்தின் நார்முடிச் சேரல் (பதிற்.4ஆம் பத்து,10)

என்று காப்பியாற்றுக் காப்பியனார் பாடினார்.

கடற்பிறகோட்டிய செங்குட்டுவன் துளுநாட்டுக் கடற்கரைப் பகுதியிலிருந்த வியலூர், கொடுகூர் முதலிய ஊர்களை வென்ற செய்தியை,

உறுபுலி யன்ன வாயவ் வீழச்

சிறுகுரல் நெய்தல் வியலூர் நூறி

அக்கரை நண்ணிக் கொடுகூர் எறிந்து (பதிற்.5ஆம் பத்து, பதிகம்)

என்று பதிற்றுப்பத்தின் ஐந்தாம்பத்தின் பதிகம் குறிப்பிடுகின்றது.

வியலூரின் வெற்றியினை,

கறிவளர் சிலம்பில் துஞ்சும் யானையின்

சிறுகுரல் நெய்தல் வியலூர் எறிந்தபின் (சிலம்பு,28:114-115)

இளங்கோவடிகள் பாடியுள்ளார்.

தம் நாட்டு மக்கள் வளமாக வாழ்வதற்கு இடம்போதாது எனக்கருதி சேரமான் செங்வங்கடுங்கோ வாழியாதன் போர் செய்தான் என்பதை,

இடஞ்சிறிது எண்ணும் ஊக்கம் துரப்ப

ஒடுங்கா உள்ளத்து, ஓம்பா ஈகைக்

கடந்தடு தானைச் சேர லாதனை (புறநானூறு,8:3-5)

சோழநாட்டிலிருந்து வலஞ்சுற்றிப் புறப்பட்டுப் பாண்டிய நாட்டையும் சேரநாட்டையும் சோழன் நலங்கிள்ளி வென்றுவிட்டதால் இனி வடக்கே படையெடுக்கக்கூடும் என்று வடதிசையரசர் நடுங்கினர் என்ற செய்தியைக் கோவூர்கிழார் பாடியுள்ளார்.

குணகடல் பின்ன தாகக் குடகடல்

வெண்தலைப் புணரிநின் மான்குளம் பலைப்ப

வலமுறை வருதலும் உண்டென்று அலமந்து

நெஞ்சு நடுங்கு அவலம் பாயத்

துஞ்சாக் கண்ண வடபுலத் தரசே (புறநானூறு,31:13-17)

போருக்கு எழும்போழுது அவன் சூளுரையாகக் கூறிய ஒரு பாடல் அவனது இறுமாப்பைக் காட்டுகின்றது. 'என் காலைப்பிடித்துக் கெஞ்சினால் இந்நாட்டையும் 'என்னுயிரையும் கூட கொடுக்க முடியும். எதிர்த்து வந்தால், உறங்கும் புலியை மிதித்த குருடன் போல அழிந்து போவார்கள். யானைக்காலில் மிதியுண்ட இளமூங்கில் போல ஆவார்கள்' எனச் சூளுரைத்தான்.

மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி

ஈயென இரக்குவ ராயின் சீருடை

முரசுகெழு தாயத்து அரசோ தஞ்சம்

இன்னுயிர் ஆயினும் கொடுக்குவென் இந்நிலத்து

ஆற்றல் உடையோர் ஆற்றல் போற்றாது என்

உள்ளம் எள்ளிய மடவோன் தௌ;ளிதின்

துஞ்சுபுலி இடறிய சிதடன் போல,

உய்ந்தனன் பெயர்தலோ அரிதே மைந்துடைக்

கழைதின் யானைக் கால் அகப்பட்ட

வன்திணி நீண்முளை போல...(புறநானூறு,73:1-10)

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி வடக்கே இமயமலையும் தெற்கே குமரியாறும் கிழக்கே நீலக் கடல்வேலியும் மேற்கே ஆழ்கடலும் கொண்ட நிலப்பகுதியை ஆட்சி செய்தான் என்பதை,

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்

தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்

குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும்

குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும் (புறநானூறு,6:1-4)

என்று காரிக்கிழார் பாடினார்.

இதன் மூலம் சங்ககாலத்தில் மன்னர்கள் பலர் மண்ணாசை கொண்டு போர் செய்து எல்லையை விரிவுபடுத்தின் என்பதை அறியமுடிகின்றது.

## பொருளாசை காரணமாகப் போர்

பொருளாசை காரணமாக அண்டைநாட்டாரோடு போர்செய்து வெற்றிபெற்று அவரிடம் திறைப்பொருள் பெற்றும், அவர்நாட்டைக் கொள்ளையிட்டும் தம் நாட்டு வளத்தைப் பெருக்கினர்.

துளுவநாடே தமிழகத்தின் வடக்கு எல்லையாக இருந்தது என்றும், அது பொன் விளையும் திருநாடாக விளங்கியதால் மோரியர் போன்றோரைப் படையெடுக்கத் தூண்டியிருக்கும் என்றும் கருதுகின்றார் (கா.அப்பாதுரை, தென்னாட்டுப் போர்க்களங்கள், ப.60)

மோரியரின் படையெடுப்புப் பற்றி,

விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்

திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த (புறநானூறு,175:6-7)

என்று கள்ளில் ஆத்திரையனாரும் பாடியுள்ளனர்.

சோழநாட்டு எல்லையில் மோரியர் படைகள் பல தடைவ தோல்வியைக் கண்டன. மோரியர் புதிய படைகளுடன் மீண்டும் வந்தனர். வடதிசைப் பேரரசின் முழு ஆற்றலும் இதில் ஈடுபடுத்தப்பட்டது. ஆயினும் சோழர் பெரும்படையும் பிற தமிழகப் படைகளும் அவர்களைச் சிதறடித்தன என்கிறார் (கா.அப்பாத்துரை. தென்னாட்டுப் போர்க்களங்கள், ப.62.)

யாம்தன் இரக்கும் காலைத் தான்எம்

உண்ணா மருங்குல் காட்டித் தன்ஊர்க்

கருங்கைக் கொல்லனை இரக்கும்

திருந்திலை நெடுவேல் வடித்திசின் எனவே (புறநானூறு,180:10-13)

எனத் கோயமான் மாறனின் படையெடுப்புக்கான காரணத்தைப் பாடினார் மதுரைக்குமரனார். போர்மேற்சென்று பகைவரை வென்று கொண்டுவரும் பொருளை வைத்துப் பாணர்களைப் பசியாற்றுச் செய்யவேண்டும் என்று நினைத்தானாம் அத்தமிழ்வேந்தன். கொல்லன் விரைவில் வேல்வடித்துக் கொடுப்பதன்மூலம் போர்செய்து பொருள் கொணர்ந்து இரவலரின் பசியைத் தீர்க்கவேண்டும் என்பதன்வழி இரண்டு கருத்துகள் புலனாகின்றன. ஒன்று: மன்னன் இரப்பவர்க்கு அளிக்கும் மனம் உடையவன் என்பது: மற்றொன்று: மனமிருந்தும் வலிமையிருந்தும் பொருள்வளமில்லாக் குறுநில மன்னர்கள் போர்செய்துதான் ஆட்சி நடத்தவேண்டும் என்ற நிலையும் இருந்துள்ளது.

பரிபாடலில் முருகன் செய்த போரைப்பற்றியும், தோற்றவர்கள் முருகனுக்குக் கொடுத்த பொருட்களைப் பற்றியும் குறிப்புகள் காணக்கிடக்கின்றன. அச்செய்தியை,

ஆரா உடம்பின் நீஅலர்ந்து விளையாடிய

போரால் வறுங்கை கைக்குப் புரந்தரன்உடைய

அல்லல்இல் அனலன் தன்மெய்யிற் பிரித்து (பரிபா,5: 55-58)

என்ற பாடலடிகளின் மூலம் அறியலாம்.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி பகைவரின் மண்ணைக் கைப்பற்றி அவர் பொருட்களை இரவலர்க்கு அளித்த செய்தியை,

பாணர் தாமரை மலையவும் புலவர்

பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்

அறனோ மற்றிது விறல்மாண் குடுமி

இன்னா ஆகப் பிறர்மண் கொண்டு

இனிய செய்தி நின்ஆர்வலர் முகத்தே (புறநானூறு,12:1-5)

என்று நெட்டிமையார் பாடினார்.

சோழன் கரிகால்பெருவளத்தானைப் பாடிய கருங்குழலாதனார் என்னும் புலவர் அவன் போரில் கொள்ளையிடுவதை நோக்கமாகக் கொண்டிருந்ததைக் குறிப்பிடுகின்றார். இரவுபகல் என்று பாராமல் பகைவர்தம் ஊரினைச் சுடும் தீயின் ஒளியில் தம் சுற்றத்தை அழைத்துச்சென்று ஆரவாரம்செய்து பிறர்நாட்டுச் செல்வங்களைக் கொண்டு வந்தான். அச்செய்தியை,

எல்லையும் இரவும் எண்ணாய், பகைவர்

ஊர்சுடு விளக்கத்து அழுவிளிக் கம்பலைக்

கொள்ளை மேவலை ஆகலின் நல்ல

இல்ல ஆகுபவால் இயல்தேர் வளவ (புறநானூறு,7:7-10)

என்று பாடினார் கருங்குழலாதனார்.

துன் நாட்டை வளப்படுத்தவும் தன்னை நாடிவந்தவர்களுக்கு வாரிவழங்கவும் வேந்தர்களுக்குப் பொருள் தேவையாய் இருந்துள்ளது. அதனால் அவர்கள் பொருள் காரணமாகப் போர்மேற்செல்ல நேர்ந்தது. தோற்ற பகைவர்களிடம் திறை வாங்கியுள்ளனர். இங்கு எடுத்துச் சொல்லப்பட்ட போர்நிகழ்ச்சிகள் பொருளாசை காரணமாக நிகழ்ந்தவை என்றாலும் அவற்றின் நோக்கம் ஏற்புடையதாகவே தோன்றுகின்றது.

## பெண்ணாசை காரணமாகப் போர்

ஒரு வேந்தன் அடுத்தநாட்டு மன்னன் மகளை மணந்துகொள்ளப் பெண்கேட்க, அவ்வேந்தன் பெண்கொடுக்க மறுத்தமையால் அந்நாட்டின்மீது போர் தொடுப்பதும் நிகழ்ந்தது. அதனை ஷமகட்பாடு அஞ்சிய மகட்பாற்காஞ்சி| என்று தொல்காப்பிய பொருளதிகாரம் குறிப்பிடுகின்றது.

அரசனாக இருப்பதனாலோ, ஆசைப்படுவதனாலோ பெண்ணைக் கொடுத்துவிடமாட்டார்கள் முதுகுடியில் பிறந்தவர்கள். வீரனாக விளங்கும் ஒருவனுக்கே இசைந்து மணமுடித்துக் கொடுப்பர் என்பதனை,

திருநயத்தக்க பண்பின் இவள் நலனே

பொருநர்க்கு அல்லது பிறர்க்கு ஆகாதே (புறநானூறு,342:5-6)

என்ற பாடல்வழி உணர்த்துகின்றார் அரிசில்கிழார்.

பெண்கேட்டு வந்தவர்கள் வேந்தர்களாக இருந்ததால் அவர்களிடம் செல்வம் தாராளமாக இருந்தது. அவர்கள் பணிந்துவந்து செல்வத்தை வழங்கினர். ஆயினும் பெற்றோர் பெண்கொடுத்த மறுத்தனர். இங்கு பெண்கேட்க வந்தோரின் செல்வவளத்தைச் சொல்லும் செய்யுட் பகுதிகள் குறிப்பிடத்தக்கவை.

முசிறியன்ன நலஞ்சால் விழுப்பொருள் (புறநானூறு,343:10)

நிறைசால் விழுப்பொருள் (புறநானூறு,344:4)

உறந்தையன்ன உரைசால் நன்கலம் (புறநானூறு,352:10)

மகட்பாற் காஞ்சித்துறை பாடியுள்ள புலவர்கள் பெண்கொடுக்க மறுக்கும் தந்தையரின் ஊரழிவை எண்ணி இரங்குவது, போருக்காக வருத்தப்படும் அவர்களது உளப்பாங்கை வெளிப்படுத்துகிறது. பரணர்,

அன்னோ, பெரும்பே துற்றன்றிவ் வருங்கடிமூதூர் (புறநானூறு,336:7)

என்றும்,

களிறுபொரக் கலங்கிய தண்கயம் போலப்

பெருங்கவின் இழப்பது கொல்லோ (புறநானூறு,341:17-18)

என்றும் பாடி இரங்குவார்.

ஊரழிவுக்குக் காரணமாகப் பெண் அமைந்துவிட்டாளே எனப் புலவர்கள் தங்கள் உணர்வை வெளிப்படுத்தியுள்ளனர். மருதனிளநாகனார்,

அரிமதர் மழைக்கண் அம்மா அரிவை

மரம்படு சிறுதீப் போல

அணங்கா யினள்தான் பிறந்த ஊர்க்கே (புறநானூறு,349:5-7)

என்று பாடினார்.

மகள் மறுத்தல் காரணமாக ஏற்படும் பேரழிவுக்கு மகளைப்பெற்ற தாயே காரணம்: அவள் அப்பெண்ணைப் பெறாதிருந்தால் அழிவு ஏற்பட்டிருக்காது என எண்ணி அவளைப் பழித்துரைக்கும் புலவர்களின் மனப்போக்கில் அவர்கள் ஷஅமைதிவிரும்பிகள்| என்ற உண்மையும் புலப்படுகின்றது. மெய்யாகவே தாயையோ, மகளையோ அவர்கள் பழிக்கவில்லை.

அறன்இலள் மன்ற தானே விறன்மலை

வேங்கை வெற்பின் விரிந்த கோங்கின்

முகைவனப்பு ஏந்திய முற்றா இளமுலைத்

தகைவளர்த்து எடுத்த நகையொடு

பகைவளர்த்திருந்த இப்பண்புஇல் தாயே (புறநானூறு,336:8-12)

தம்மகளை மணம் பேசவந்த மாற்றரசனைப் பழித்துப் பேசி அவனுக்கு மகளைத்தர மறுத்துவிட்டான் ஒருவேந்தன். மகள்கேட்டு வந்தவன் செய்தி அறிந்து, ஷநாளைய போரில் அவள் தந்தையைக் கொன்று அவளை மணம்புரிவேன் அல்லது விழுப்புண்பட்டு இறந்துபடுவேன்| என்று வஞ்சினம் உரைத்ததாகப் பரணர் பாடியுள்ளார்.

சுணங்கணி வனமுலை அவளொடு நாளை

மணம்புகு வைகல் ஆகுதல் ஒன்றோ

ஆரமர் உழக்கிய மறம்கிளர் முன்பின்

நீள்இலை எஃகம் மறுத்த உடம்பொடு

வாரா உலகம் புகுதல் ஒன்றே (புறநானூறு,341:11-15)

## அரசுரிமை காரணமாகப் போர்

சங்க காலத்தில் நிகழ்ந்த போர்களுக்கு அரசுரிமை பற்றிய பாரணங்களும் இருந்தன. மன்னன் மாய்ந்தபின்னர் அடுத்து நாட்டை ஆளுகின்ற உரிமை மூத்தமகனுக்குத்தான் என்ற மரபு இருந்தது. மரபுமீறலாகச் சிலவேளை கருத்துமுரண் எழுந்து போர் ஏற்பட்டதும் உண்டு. அவ்வாறு அரசுரிமை காரணமாகத் தந்தை - மகன், அண்ணன் - தம்பி ஆகியோருக்கு இடையே போர் நடைபெற்றதைச் சங்கப் புலவர்கள் பதிவுசெய்துள்ளனர்.

கோப்பெருஞ்சோழனோடு அவன் மக்களை போர்செய்ய முனைந்தபொழுது மானத்தின்பாற்பட்டு அவர்களை எதிர்த்துப் போர்புரியத் துணிற்தான் அம்மன்னன்.

மண்டுஅமர் அட்ட மதனுடை நோன்தாள்

வெண்குடை விளக்கும் விறல்கெழு வேந்தே

பொங்குநீர் உடுத்த இம்மலர்தலை உலகத்து

நின்தலை வந்த இருவரை நினைப்பின்

தொன்றுஉறை துப்பின்நின் பகைஞரும் அல்லர்

அமர்வெங் காட்சியொடு மாறுஎதிர்பு எழுந்தவர் (புறநானூறு,213:1-6)

அரசுரிமை தங்களுக்கு முறையாக வருவதற்கு முன்னரே அவசரப்பட்டுத் தந்தையுடன் மோதுவதற்கு ஆயத்தமான மக்களை அந்த மன்னன் மன்னித்துவிட்டான் என்பதுதான் மனங்கொள்ளத்தக்க செய்தியாகும்.

தம் உரிமையை நிலைநாட்டுவதற்கு அல்லது பெறுவதற்கு தாயத்தாருடன் போர்நிகழ்த்திய வாரிசுகளும் உண்டு. நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் நிகழ்ந்தபோர் அத்தகையது.

ஷநின்னொடு பொருபவன் பனம்பூமாலையைச் சூடியவனோ அல்லது வேப்பமாலையைச் சூடியவனோ அல்லன்: ஆத்தி மாலையைச் சூடியவன். நின்னுடைய மாலையும் ஆத்தியே. எனவே ஒருகுடிப்பிறந்தோர் போர்செய்வது போற்றத்தக்கதன்று‖ என்று அவர்களை அமைதிப்படுத்தினார் கோவூர்கிழார்.

நின்ன கண்ணியும் ஆர்மிடைந்தன்றே நின்னொடு

பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே

ஒருவீர் தோற்பினும் தோற்பது நும்குடியே (புறநானூறு,45:3-5)

அண்ணன் தம்பிகளுக்குள்ளே அரசுரிமை காரணமாகப் ஆபார் நிகழ்ந்துள்ளதைப் பெருந்தலைச்சாத்தனாரும் பாடியுள்ளார். குமணன் என்னும் குறுநில மன்னனின் தம்பி இளங்குமணன், பதவி ஆசைகொண்டு தன் அண்ணனைக் கொல்ல நினைத்தான். அதனை அறிந்த குமணன் நாட்டைவிட்டு ஓடிக் காட்டில் சென்று வாழ்ந்தான். தன் அண்ணன் குமணன் தலையைக் கொண்டுவருவோர்க்கு மிக்கபொருள் தருவதாக அறிவித்தான் தம்பி. தன்னிடம் பரிசில் கேட்டு வந்த பெருந்தலைச்சாத்தனாருக்குக் கொடுக்க ஒன்றுமில்லாததால் தன்தலையை வெட்டிச்சென்று இளங்குமணனிடடம் காட்டி, வேண்டிய பொருளைப் பெற்றுக்கொள்ளுமாறு கூறிய குமணன் தன்னுடைய வீரவாளையும் அந்த இரவலன்பால் கொடுத்தான.; (புறநானூறு -165)

தலையாளங்கானத்துச்செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியனால் யானைகட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை சிறைபட்டான். இரும்பொறை சிறைமீண்டு தன்னாட்சியை மீட்ட செய்தியும் உண்டு. பெரிய குழியில் அகப்பட்ட களிறு தந்தத்தால் குத்திக் குழியைத் தூர்த்துத் தன்னினத்தைச்சேரும். அதுபோல யானைகட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை தன் வலிமையால் தப்பிச்சென்று தன்னாட்சியை மீட்டான். (புறநானூறு -17)

## மானக்குறைவின் காரணமாகப் போர்

மானத்தைத் தம் உயிரினும் மேலாகக் கருதியவர்கள் தமிழர்கள்.

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்

உயிர்நீப்பர் மானம் வரின் (குறள் - 969)

என்று தமிழரின் வாழ்க்கை நிலையைப் பாடினார் வள்ளுவர்.

தமக்கு இழிவுநேர்ந்தால் உயிர்வாழாத மானமுடையவரையே உலகத்தார் போற்றித் தொழுவர் எனக்குறிப்பிட்டுள்ளார்.

இளிவரின் வாழாத மானம் உடையார்

ஒளிதொழுது ஏத்தும் உலகு. (குறள் - 970)

இளையன் என்று தன்னை ஏளமாகக் கருதி, வெற்றி தமதே என்ற இறுமாப்புடன் படையெடுத்த எதிரிகளைக்கண்டு தலையாளங்கானத்துச்செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் கடுஞ்சினம் கொண்டான். ஷஅவர்களை வென்று அவர்கள் முரசங்களைக் கைக்கொள்வேன். கொள்ளாவிட்டால் நான் கொடுங்கோலனாகக் கருதப்படுவேன். புலவர் என்னைப் பாடாதொழிக. இரவலர்க்கு ஈயாத பண்புடையனாவேன்!‖ என்று வஞ்சினம் கூறினாhன். அவனே இயற்றிய பாடலில் அவ்வஞ்சினம் காணப்படுகிறது. (புறநானூறு -72)

ஒருவனோடு ஒருவன் போரிடுகின்ற இயற்கைவிதிக்கு மாறாக, ஒருவன்மீது எழுவர் படையெடுத்துத் தோல்வியுற்றார். அ∴து உலகில் காணப்படாத நிகழ்ச்சியாகும் என்று தலையாளங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் நிகழ்த்திய போரின் சிறப்பினையும் அவன் புகழ்ச்சிறப்பினையும் இடைக்குன்றூர்க்கிழார் பாடலின் மூலம் உணர முடிகிறது. (புறநானூறு -76)

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், ஷஎன்னை எதிர்த்துப் போரிட வருவோரை வென்றிடுவேன்: இல்லையெனில் அரசாட்சியினை அறம் தெரியாத ஒருவனிடம் கொடுத்து முறைதிரிந்து ஆட்சி நடத்திய குற்றத்திற்கு ஆளாவேன். பகைவர்க்குப் புறங்கொடுப்பேனாகில் நான் ஆளும் நாட்டில் மறுபிறப்பில் பிறவாது பிறர் ஆளும் வன்புலங்களில் சென்று பிறக்கக் கடவேன்| என்று ஆட்சியின்மீது ஆனையிட்டு வஞ்சினங்கூறினாhன். (புறநானூறு -71)

சோழன் நலங்கிள்ளி, ஷஎன்மீது படையெடுத்துவரும் பகைவரை அழிக்காது விடுவேனாகில், என் மாலை பொதுப்பெண்டிரது பொருந்தாத புணர்ச்சியிடைத் துவள்வதாக| என்று சூளுரைத்தான். தன்னுடைய ஒழுக்கத்தின்மீது ஆணையிட்டு அச்சூளுரையை மொழிந்தான் என்பது குறிப்பிடத்தக்கது. இதனை,

தீதுஇல் நெங்சத்துக் காதல் கொள்ளாப்

பல்லிருங் கூந்தல் மகளிர்

ஒல்லா முயக்கிடைக் குழைகவென் தாரே (புறநானூறு,73:12-14)

அரசனை ஏளனமாக எண்ணிய பொழுதும், தன்மானத்திற்கு பங்கம் வந்தபொழுதும் மன்னன் சூளுரைத்து போர்மேற்கொண்டான் என்பதை இப்புறநானூற்றுப் பாடல்கள் பறைசாற்றுகின்றன.

## முடிவுரை

மனிதன் வேளாண்மைத்தொழில் செய்யத்தொடங்கி ஆநிரைகளைப் பேணி வளர்த்து அவற்றைச் செல்வமாக்கிக் கொண்ட தனியுடைமைநிலை தோன்றிய காலம்முதல் வர்க்கப்போராட்டம் தொடங்கிவிட்டது. பொருளாசையும் பொறாமைக்குணமும் சினமும் பிறர்வளம் பறித்துண்ணும் விலங்குத்தன்மையும் உளவியல் சார்ந்த போர்காரணங்கள் ஆகும். மனிதவர்க்கம் முழுநாகரிகம் பெற்று அரசாட்சிமுறை தோன்றிய பின்னர் புகழ்வேட்கை காரணமாகப் போர்கள் நிகழ்ந்துள்ளனவென்றாலும் அவற்றுக்கும் அடிப்படைக் காரணம் வீரஉணர்வும் மான உணர்வும் படைபலமும் ஆகும் அரசு உரிமைக்குத் தடை ஏற்படுதல், மகள் மறுத்தல், நாட்டின் எல்லையை விரிவுபடுத்துதல், அரசர்களுக்கு இயல்பாக இருந்த மறப்பண்பு மான உணர்வு ஆகியனவும் போருக்குக் காரணங்களாக அமைந்துள்ளன என்பதையும் இக்கட்டுரைவழி அறிய முடிகிறது.

## References

Appadurai, K. (2003) Thennattu Porkkalangal, Poompugar Publication, Chennai, India.

Govinthan, K., (1984) Pandai Tamilar Porneri, Valluvar Pannai, Chennai, India.

Ilangovadigal, (1966) Silappathikaram, Na.Mu.Vengadasamy Nattar Urai, Tamilsangam, Pakaneri, India

Mahadevan, Kathir, (1980) Pazhanthamizhar Virappanpaadu, Lakshmi veliyedu, Madurai, India.

Thiruvalluvar, (1970) Thirukkural, Parimelazhagar Urai, Kazhagaveliyedu, Chennai, India.

Thuraisamypillai, S (1968) Pathitrupathu, Kazhagaveliyedu, Chennai, India.

Thuraisamypillai, S (1970) Purananooru, Kazhagaveliyedu, Chennai, India.

Vithyananthan, S. (1971) Tamizhar Salpu, Paari Puthaga Pannai, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License